சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**விடுமுறைக்கால செயலட்டை**

தயாரிப்பு – மாவனல்லைக் கல்வி வலயம்

# தரம் 5 – சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்.

**(நவம்பர் 3ஆம் வாரம்)**

## 14. கருப்பொருள்: மனிதனும் தகவல்களும்.

### ❖ செயற்பாடு – 1


பிள்ளைகளே உங்களுக்குத் தெரியுமா தகவல் தொடர்பாடல் என்பது தகவல்களை மற்றவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் வழங்கும் செய்தியாகும். அதாவது ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்லுதல் அல்லது அறிவிப்பது ஆகும். அன்றிலிருந்து இன்றுவரை மனிதன் பயன்படுத்தும் தகவல் தொடர்பு முறைகள் பற்றிப் பெரியவர்களுடன் கலந்துரையாடி தகவல்களைச் சேகரிக்கவும். (வரைபடங்கள், புகைப்படங்கள், புத்தகங்கள், செய்தித் தாள்களைத் தேடிக்கொள்ளுங்கள்.)

### ❖ செயற்பாடு – 2

உங்களது வீட்டுக்குக் கொண்டுவரும் உணவு சுற்றுத் தாள்கள், மருந்துப் பொருள்களின் சுற்றுத்தாள்கள் மற்றும் விளம்பரங்கள், வானொலி, தொலைக் காட்சி அறிவித்தல்கள் மற்றும் வீட்டில் பயன்படுத்தும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள். என்பவற்றை இயன்றளவு தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள். அவற்றில் உள்ள அறிவுறுத்தல்கள் எவை என்பதை நன்றாக வாசியுங்கள்.

### ❖ செயற்பாடு – 3

பிள்ளைகளே உங்களது வீட்டில் அல்லது சுற்றுப் புறத்திலுள்ள பாதுகாப்பற்ற இடத்தை இனங் காணுங்கள். அவ்விடங்களில் விபத்துக்கள் ஏற்படலாம். அவ்விடத்தால் செல்பவர்கள் அவதானமாகச் செல்வதற்காக மற்றவர்களுக்கு அறிவூட்டப் பொருத்தமான துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தயாரிக்கவும். முடியுமாயின் குறியீடுகள், அல்லது சமிக்ஞைகளைப் பயன்படுத்துங்கள்.



- நாம் தகவல் பெறும் வழிகளைப் பிரித்து எழுதுக
  (அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம்)
  உதாரணம்: பத்திரிகை அச்சு ஊடகமாகும்,
  வானொலி இலத்திரனியல் ஊடகமாகும்.

